# இயற்கைக்கு மேம்பட்டவைகள்

3



சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

# நீங்கள், “நல்லது, அவர்கள் அம்மனிதனை எலிசாவின் எலும்புகளில் போட்ட போது, அவன் (ஜீவனைப்) பெற்றானே, அதைக் குறித்து என்ன?” என்று கேட்கலாம்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## 2 இராஜாக்கள் 13:20

எலிசா மரணமடைந்தான்; அவனை அடக்கம்பண்ணினார்கள்; மறுவருஷத்திலே மோவாபியரின் தண்டுகள் தேசத்திலே வந்தது.

## 2 இராஜாக்கள் 13:21

அப்பொழுது அவர்கள், ஒரு மனுஷனை அடக்கம்பண்ணப்போகையில், அந்தத் தண்டைக் கண்டு, அந்த மனுஷனை எலிசாவின் கல்லறையில் போட்டார்கள்; அந்த மனுஷனின் பிரேதம் அதிலே விழுந்து எலிசாவின் எலும்புகளின்மேல் பட்டபோது, அந்த மனுஷன் உயிரடைந்து தன் கால்களை ஊன்றி எழுந்திருந்தான்.

*செய்தி:* **தீர்க்கதரிசியாகிய எலிசா**, அக்டோபர் 2, 1956, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா

70. இங்கே சமீபத்தில்... இன்றிரவு இங்கேயிருக்கும் என்னுடைய கத்தோலிக்க நண்பர்களிடம் இதை மரியாதையுடன் கூறுகிறேன், நிறைய... என்னுடைய ஜனங்களில் அநேகர் கத்தோலிக்கர்கள் தான். ஆனால் நான் ஒருபோதும் உங்களைப் புண்படுத்தும்படி இதைக் கூறவில்லை. நான் ஒருபோதும் அதற்காக வரவில்லை. நான் உங்களை ஆசீர்வதிக்கவே வந்திருக்கிறேன். உங்கள் மதத்திற்கு விரோதமாக நான் எதையும் கூறவில்லை, நான் இதைக் கூறுகிறேன்: கத்தோலிக்கன் தன்னுடைய போதனைகளுக்கு எவ்வளவு உண்மையாக ஜீவிக்கிறானோ அவ்வளவு உண்மையாக புரட்டஸ்டன்ட் ஜீவித்திருந்தால், நாம் ஒரு வித்தியாசமான உலகத்தைக் கொண்டிருந்திருப்போம். அது சரியே. ஆனால்... அவர்களுக்குப் போதிக்கப்பட்டதை, அவர்கள் விசுவாசிக்கிறார்கள்.

71. ஆனால் சமீபத்தில், வத்திக்கானில், நான் வத்திக்கானைப் பார்க்க அங்கு போனேன். அங்கே சரியாக ரோமிலேயே இரண்டு இரவுகளுக்கான கூட்டம் எனக்கு இருந்தது. அடுத்த நாள், வத்திக்கானிலிருந்து கொஞ்ச தூரத்தில், அவர்கள் வினோதமான ஏதோவொன்றைக் காண என்னை அழைத்துச் சென்றார்கள். அது ஒரு பெரிய சபையாக இருந்தது, அதற்குக் கீழே அடியில், அவர்களுக்கு ஒரு-ஒரு திராட்சைத் தோட்டத்தைப் போன்ற (ஒன்று) இருந்தது அல்லது ஒரு நடவுசெய்யும் இடம் என்று சொல்லலாம்.

72. மடத்துத்துறவிகள் மரிக்கும்போது, அவர்கள் இவர்களை கீழே கொண்டு சென்று, விதைகளை நிலத்தில் நடுவது போன்று, இவர்களை நடுகிறார்கள், அந்த மாமிசம் எலும்பிலிருந்து விழும் மட்டுமாக, அவர்களை அங்கேயே இருக்கும்படி விட்டுவிடுகிறார்கள். பிறகு அவர்கள் அந்த எலும்பை எடுத்து, அதை வழவழப்பாக மெருகேற்றி மின்சார ஒளிவிளக்குகளைப் (light fixtures) பொருத்தி, இடங்களை ஏற்படுத்தி, அந்த மூலையில் மண்டை ஓடுகளை வைக்கிறார்கள். அது அப்படியே வரிசையாக முறையாக வைக்கப்பட்டிருந்தது (packed up), ஓ, அது இந்த கூரையைப்போன்று அவ்வளவு உயரமாக

இருந்தது, துறவிகளுடைய எல்லாவிதமான எலும்புகளும் அங்கேயிருந்தன; அப்போது அங்கேயிருந்த அநேகம், மறுபடி புழுதிக்கு திரும்பிக் கொண்டிருந்தன.

73. ஜனங்களுடைய மூடநம்பிக்கையைக் காணும்போது, அவர்கள் ஏறக்குறைய அவைகளை இரண்டாக தேய்த்துப்போடும் அளவுக்கு அந்த எலும்புகளை அவர்கள் தேய்த்திருந்தார்கள்; சற்றே அவ்விதமான மூடநம்பிக்கைகள். **தேவன் எலும்புகளில் வாசம் பண்ண மாட்டார். தேவன் மனிதகுலத்தில் ஆவியில் தான் வாசம் செய்கிறார்,** மனிதன் மூலமாக இருதயம் துடிக்கும்போது, அந்த இருதயத்தின் துடிப்பில்தான். தேவனுக்கு ஊழியக்காரர்கள் உண்டு.

74. நீங்கள், "நல்லது, அவர்கள் அம்மனிதனை எலிசாவின் எலும்புகளில் போட்ட போது, அவன் (ஜீவனைப்) பெற்றானே, அதைக் குறித்து என்ன?" என்று கேட்கலாம். நல்லது, அது அப்படியே ஒரு நேரமாக இருக்க நேரிட்டது, சரியாக ஒரே நேரத்தில் எதிர்பாராது நிகழ்ந்த சம்பவமாக அது இருந்தது, இருப்பினும் கூட அது அவ்வாறு சம்பவித்தது, ஏனென்றால் இந்த ஜனங்களுக்குப் பின்னால் ஒரு அந்நிய (அயல்நாட்டு) இராணுவப் படை வந்து

கொண்டிருந்தது, அவர்களுக்கு அது தெரியாதிருந்தது.



**அவர்கள் அவனை அங்கே உள்ளே வேண்டுமென்றே போடவில்லை. அந்த இராணுவத்துக்கு தப்பி ஓடும்படியாக, அவர்கள் அவனை அங்கே உள்ளே எறிந்து, அவன் எலிசாவின் எலும்புகளில் மோதினபோது, தேவன் மிகத் துரிதமாக அவனை உயிரோடு எழுப்பினார். அந்த எலும்புகளில் எதுவுமில்லை, எலிசாவோ**

**மகிமையில் இருந்தான்.** ஆமென். **எனவே தேவன் மனிதர்களிடத்தில் தான் வாசம் செய்கிறார்.** ஆமென்.



75. **இப்பொழுது, ஜனங்கள், தாங்கள் இயேசுவைக் காண்பதற்கான ஒரே வழி என்னவென்றால், அவர்கள் அவரை உங்களுக்குள் காணும்போதுதான்** - அவர்கள் உங்களுக்குள் அவரைக் காணும்போதுதான். **கிறிஸ்துவின் ஆவி உங்களுக்குள் வாசம் செய்து, உங்களுடைய நடத்தையை - உங்களுடைய செய்கைகளை அவருடைய ஆவிக்குள்ளாக கீழ்ப்படுத்தும் நிலைக்குள் கொண்டுவருமானால், அது நீங்கள்**

**அவரைப்போன்று நடந்துகொள்ளவும், அவரைப்போன்று பேசவும், அவரைப்போன்று நடக்கவும், அவரைப்போன்று ஜீவிக்கவும் செய்யும்.** பாருங்கள்? **அப்போது ஜனங்கள் இயேசுவை உங்களுக்குள் காண்கிறார்கள்.** அங்கேதான், அந்தப் பழைய பாடல்: *மற்றவர்கள் இயேசுவை உங்களுக்குள் காணட்டும்.*

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதித் திருத்தம் செய்து வெளிவரும்.)*

★★★★★

# ஜெபவரிசையில் வௌவால் போன்று அசுத்த ஆவி வாலிபனை விட்டு வெளியேறுதல்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

71. அங்கே உட்கார்ந்து என்னையே நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிற சகோதரியே, நீங்கள் கீல்வாதத்தினாலே அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள், இப்பொழுது உங்கள் விசுவாசம் உங்களை இரட்சித்தது; நீங்கள் வீட்டிற்குச் சென்று சுகமாயிருக்கலாம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

நீங்கள்... ஐ கொண்டு வருவீர்களா. வாலிபனே, வணக்கம். நான் தேவனுடைய ஊழியக்காரன் என்று நீ விசுவாசிக்கிறாயா? மற்ற அநேக ஊழியக்காரர்கள் இங்கேயிருக்கிறார்கள், ஆனால் நான் அவருடைய ஊழியக்காரனாக இருக்கிறேன். உடனடியாக, அங்கே ஒரு ஆவியானது இந்த வாலிபனிடமிருந்து இழுத்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பையன் தொல்லையில் அகப்பட்டுள்ளான், அவன் கடுமையான பிரச்சனையோடு இருக்கிறான். இந்தப் பையன் மனநிலை கோளாறினால் அவதிப்பட்டு வருகிறான். நீ ஒரு மனநிலை மருத்துவமனையிலிருந்து இப்பொழுதுதான் வருகிறாய். அவர்கள் ஏதோவொரு விதமான ஒரு-ஒரு அதிர்ச்சி சிகிச்சையை உனக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறதை நான் காண்கிறேன். அவர்கள் உனக்கு அதிர்ச்சி சிகிச்சையை கொடுத்திருக்கிறார்கள். உனக்கு இயற்கைக்கு மாறான ஒரு பயம் தொடர்ந்து (aphobia) இருக்கிறது:

அதாவது, நீ எல்லா நேரமும் உனக்கு முன்பாக ஒரு முகத்தைப் பார்க்கிறாய். அது ஒரு-அது நீ காண்கிற உனது தாயாரின் முகம் தான். உனக்கு விவாகம் ஆகி விட்டது. உனக்கு ஒரு மனைவியும் இரண்டு பிள்ளைகளும் இருக்கிறார்கள்.

கதரா தேசத்து மனிதனிடம் வந்து, அம்மனிதனை விடுவித்தவராகிய இயேசு கிறிஸ்து உன்னை இதிலிருந்து விடுவித்து, அந்த இயற்கைக்கு மாறான பயத்தை உன்னிலிருந்து எடுத்துப் போட்டு, அந்தப் பிசாசை உன்னை விட்டுத் துரத்தும்படி இன்றிரவு இங்கேயிருக்கிறார், நீ சுகத்தோடு உன்னுடைய வீட்டிற்கு திரும்பிச் செல்லலாம். நீ அதை விசுவாசிக்கிறாயா? உனக்காக இதைச் செய்யவே அவர் என்னை அனுப்பியிருக்கிறார் என்று நீ விசுவாசிக்கிறாயா?

72. நீங்கள் உங்கள் தலைகளை தாழ்த்தி பயபக்தியோடு இருங்கள். இது மிகவும் ஆபத்தானதும், அபாயகரமானதுமாய் இருக்கிறது. "உங்கள் தலையை உயர்த்துங்கள்" என்ற என்னுடைய சத்தத்தை நீங்கள் கேட்பது வரையில், உங்கள் தலையைத் தொடர்ந்து தாழ்த்தி வைத்துக் கொள்ளுங்கள். வாலிபனே, இங்கே வா. இந்த ஆசீர்வாதத்தை நான் கேட்கிறதற்கு முன்னால், நான் ஒரு காரியத்தை உன்னிடம் கேட்கப் போகிறேன். அவருடைய ஊழியக்காரனாக எனக்கு நீ கீழ்ப்படிந்து, செய்ய வேண்டுமென்று நான் உன்னிடம் கூறுகிறபடி

நீ செய்வாயா? நீ சுகமடையப் போகிறாய். விடுதலையின் நேரம் சமீபமாயுள்ளது. வாலிபனே, இதைச் செய்து கொண்டிருப்பது ஒரு பிசாசு தான். அவன் உன்னை முற்றிலும் பைத்தியம் பிடித்த நிலைக்கு உன்னைத் தள்ளி, உன்னுடைய எஞ்சியுள்ள வாழ்நாட்களில் அதேவிதமாவே உன்னை வைத்திருப்பான், ஆனால் உன்னுடைய சரியான மனநிலைக்கும், சரியான புத்தி தெளிந்த நிலைக்கும் உன்னைத் திரும்பவும் கொண்டு வர தேவனால் கூடும்.

நான் வேறொரு காரியத்தைக் காண்கிறேன். நீ மனநோய் மருத்துவர்களிடம் இருந்திருக்கிறாய். அவர்கள் - யாரோ ஒருவர் உன்னிடம் பேச முயற்சி செய்வதை நான் பார்க்கிறேன், ஆனால் அது (நல்ல) யோசனை அல்ல. உனக்கு அதைக் காட்டிலும் அதிகம் தேவைப்படுகிறது: அதற்கு ஜீவனுள்ள தேவனுடைய வல்லமை அவசியமாயுள்ளது. நான் கூறுவது உனக்குப் புரிகிறதா? உனக்குப் புரியவில்லை என்றால், சற்று நேரத்தில் நீ புரிந்து கொள்வாய். பயபக்தியோடு உன்னுடைய தலையைத் தாழ்த்தி, உன்னை விடுவிக்கும்படியாக தேவனுடைய குமாரனாகிய இயேசுவை தேவன் எழுப்பினார் என்று விசுவாசி.

73. பரலோகப் பிதாவே, இங்கே நின்று கொண்டிருக்கும் இந்த வாலிபன் அருமையான தோற்றம் கொண்ட ஒரு வாலிபனாயிருக்கிறான்,

வாலிப மனிதத் தன்மையின் சிற்பமாக இங்கே நின்று கொண்டிருக்கிறான், அவனுடைய வீட்டை சுக்கு நூறாக கிழித்துப் போட்டு, அவனுடைய குடும்பத்தை உடைத்துப் போட்டு, இந்த வாலிபனை பைத்தியம் பிடிக்கும்படி செய்யவே சாத்தான் அவனிடம் வந்திருக்கிறான். ஆனால் ஓ தேவனே, வானங்களையும் பூமியையும் உண்டாக்கினவரே, கிறிஸ்து இயேசு மூலமாய் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவரே, நான் இந்த வாலிபனுக்காக விசுவாசமுள்ள ஜெபத்தோடு உம்முடைய ஊழியக்காரனாக வருகிறேன், அவன் இருக்கிற நிலைமையின் காரணமாக அவனாகவே விசுவாசத்தைக் கொண்டிருக்க முடியாது என்பதை சற்று முன்பு அறிந்து கொண்டேன். கர்த்தாவே, உமது ஊழியக்காரனின் ஜெபத்தைக் கேட்டருளும். **சாத்தான் அவனிடத்தில் பதுங்கியிருந்து**, அவனுடைய வாழ்க்கையை ஒரு துயரமாக ஆக்கிக் கொண்டிருக்கிறான், ஆனால் அந்த பைத்தியக்காரனை விடுவித்த கர்த்தராகிய இயேசு, அது இந்த வாலிபனுக்கு இருப்பதைக் காட்டிலும் அதிக மோசமாக இருந்தது. இன்றிரவு, உம்மால் இந்த வாலிபனை சுகப்படுத்த முடியும்.

சாத்தானே, இவனைக் கட்டி வைத்திருக்கிற நீ, மனநல மருத்துவர்களிடமிருந்து தப்பித்து விட்டாய்; நீ மருத்துவ சிகிச்சைகளிலிருந்தும் தப்பித்து விட்டிருக்கிறாய்; ஆனால் தேவனுடைய

வல்லமையிடமிருந்து உன்னால் தப்பிக்கவே முடியாது. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவனை விட்டு வெளியே வா. அவனை விட்டுப் போ.

இப்பொழுது, வாலிபனே, இங்கே பார். அது முடிந்து விட்டது; நீ சுகமடைந்து விட்டாய். இனிமேல் புகைபிடிக்காதே. ஒரு உண்மையான கிறிஸ்தவனைப் போன்று ஜீவி. போ, தேவனைத் துதித்துக் கொண்டும், இரவும் பகலும் அவருடைய துதிகளைப் பாடிக் கொண்டும் இரு. உன்னுடைய கரங்களை மேலே உயர்த்தி, நீ சுகமடைந்ததற்காக அவருக்கு நன்றி செலுத்து. இப்பொழுது, நீ - நீ நலமாக உணருகிறாய், இல்லையா? இவன் அருமையாக உணருவதாக இந்த வாலிபன் கூறுகிறான். இப்பொழுது, எல்லாம் போய் விட்டது, அது போன போது, ஒரு அசுத்த ஆவி அந்தவிதமாக போனது.

நான் ஒரு மதவெறியன் அல்லவென்று பரலோகத்திலிருக்கிற தேவன் அறிவார், அவரே நியாயத்தீர்ப்பின் நாளிலே நியாயம் தீர்ப்பார். **அந்தக் காரியமானது வேகமாக சுழன்ற படி, இந்தப்பையனை விட்டு அந்தத் திசையில் கடந்து சென்றது. அது அவனை விட்டுப் போன போது, வீசும் காற்று, "ஷ்ஷ்ஷ்" என்று அவ்விதமாக போவதைப் போன்று கூட அது உரைப்பட்டது.** அந்த அசுத்த (ஆவியின்) வல்லமைகள் இந்த வாலிபனை விட்டு அகன்று

விட்டது. போ, உன்னுடைய மனைவியிடமும், குடும்பத்திடமும் சென்று, களிகூர்ந்து கொண்டே சந்தோஷமாயிரு. கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு.

74. அந்த சீமாட்டியை அழைத்து வாருங்கள். (ஒரு **அசுத்த (ஆவி) காரியமானது காணக்கூடிய விதத்தில் யாரோ ஒருவரை விட்டு கடந்து போனதை நான் நீண்ட காலமாக பார்த்தது இதுதான் முதல் தடவை. அது ஒரு வௌவால்** (bat) **போன்று கடந்து சென்றது**, அவ்விதமாக ஒரு பக்கத்திலிருந்து கடந்து போனது) சீமாட்டியே, இங்கே வாருங்கள். உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறீர்களா?

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம் எல்லாரிடத்திலும் இரக்கமாயிருக்கிறார். அவருடைய குமாரனாகிய கர்த்தராகிய இயேசுவின் இரத்தமானது நம்மை மூடி, சகல பொல்லாத வல்லமைகளிலிருந்தும் நம்மைப் பாதுகாப்பதாக. இயேசு அற்புதமானவர். தேவனே, இரக்கமாயிருக்க வேண்டும் என்பதே என்னுடைய ஜெபமாயுள்ளது.

***செய்தி:*** தீர்க்கதரிசியாகிய எலிசா, ஜூலை 23, 1954

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

# அப்போது நான் வேறொரு தேசத்திற்குள், வேறொரு உலகத்திற்குள் மங்கி மறைந்து போய்விடுகிறேன் *(fading out)* ...



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# செய்தி: **எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும்**,

*ஆகஸ்டு 18, 1950, பத்தி எண் 24*

*நீங்கள் கொண்டிருந்தது அதுவல்ல... இப்பொழுது அது ஒரு சொப்பனம் அல்ல, நண்பனே. ஒரு சொப்பனம் என்பது கனவாக இருக்கிறது. ஒரு தரிசனம் என்பது, நான் இப்பொழுது உங்களைப் பார்த்துக் கொண்டிருப்பது போன்று அல்லது நீங்கள் என்னைப் பார்த்துக் கொண்டிருப்பது போன்று, நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிற ஏதோவொன்றாக உள்ளது.*

*சில சமயங்களில், நான் இவ்விதமாக நின்று கொண்டிருப்பேன்; நான் எனது*

அறையில் உட்கார்ந்திருப்பேன், எனது அறையில் இருந்தபடி என் குடும்பத்தினரோடு பேசிக் கொண்டிருக்கும் போது, நான் முற்றிலுமாக வேறு ஏதோவொரு இடத்திற்குப் போய்விடுவேன், ஒன்றரை மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரமாக அவ்வாறு போய் விடுவேன். அப்போது ஒரு துளி மூச்சும் இல்லாமல், முழுவதும் அசைவு இன்றி (சத்தமேயில்லாமல்) இருப்பேன். அதை மருத்துவ விஞ்ஞானத்தால் புரிந்து கொள்ள முடியாது. அங்கே ஒரு துளி மூச்சும் கூட இருக்காது. நீங்கள் அருமையான ஒரு காரியமாக என்னுடைய மூக்கைச் சுற்றிலும் நீங்கள் விரும்பும் எதையும் வைத்துப் பார்க்கலாம், அப்போது ஒரு துளி மூச்சும் இருக்காது என்று அவர்கள் என்னிடம் கூறுகிறார்கள்.

ஆனால் என்னுடைய சுவாசங்களும், இதயத்துடிப்புகளும் அப்படியே அதேவிதமாகவே இருக்கிறது. ஆனால் அவர்கள் அதைப் புரிந்து கொள்வதில்லை.

அப்போது நான் வேறொரு தேசத்திற்குள், வேறொரு உலகத்திற்குள் மங்கி மறைந்து போய்விடுகிறேன் (fading out) ... நீங்கள் திரும்பி வரும்போது, தேவன் எதைக் கூறினாரோ, அதை மிகச்சரியாக கொண்டிருக்கிறீர்கள். அது ஒருபோதும் தவறிப்போகாது. அது தவறிப்போக முடியாது; அது தேவனாக இருக்கிறது.

அவர் உன்னை
அனுப்புவாரென்றால், உன்னை
முற்றிலுமாக காக்க வேண்டியது
அவருடைய பொறுப்பாகும்



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

# செய்தி: மூவகை விசுவாசிகள்

THREE KINDS OF BELIEVERS

*நவம்பர் 24, 1963 பிரான்ஹாம் கூடாரம் ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா*

---

198. ஒரு உண்மையான விசுவாசி தேவனுடைய வார்த்தையைத் தவிர வேறொன்றையும் காதால் கேட்கமாட்டான். வார்த்தையையே அவன் எப்பொழுதும் கவனித்துக் கொண்டிருப்பான். பிழை கண்டு பிடிக்கும்படியான வாய்ப்புக்காக அவன் காத்திராமல், தேவனை

விசுவாசித்து அதிலே அவன் தொடர்ந்து நடக்கிறான். பாருங்கள்? அவனே விசுவாசிக்குரிய லட்சண மாயிருக்கிறான்.

199. அவிசுவாசி பத்து நிமிடங்கள் கூட செய்தியை கவனித்துக் கேட்காதவனாய் அங்கிருந்து வெளியே சென்று விடுகிறான். ஏனெனில் அது அவனுடைய மதக் கோட்பாடுக்கு விரோதமாயிருக்கின்றது.

200. இந்த பாவனை விசுவாசியோ (யூதாஸ்) ஒரு ஏமாற்றுக்காரன், சண்டாளன், கூடவே இருந்து குழிப்பறிப்பவன். சில சமயங்களில் இந்த பாவனை

விசுவாசிகள் ஜனங்கள் மத்தியில் பிரபலமானவர் களாயிருக்கின்றனர் என்பதை கவனியுங்கள். அது உண்மை. இவர்கள் சாத்தானின் குமாரர்களைப் போல அதிக படிப்புள்ள வர்களாகவும், வேத பாண்டியத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர் களாயும், மருத்துவர்களாகவும், ஞானம் பெற்றவர்களாகவும், அதிக வருமானம் உடையவர்களாயும், எந்தக் குறைவுமின்றி இருக்கின்றனர். கவனியுங்கள்.

201. சாத்தான் ஏவாளிடம் வந்தபோது, எல்லா வார்த்தையையும் ஒத்துக் கொள்கிறவனை போல

காணப்பட்டான். ஆனால் அவன் ஏவாளிடம் பலவீனமான பகுதி எது என்று காணு மட்டும் காத்திருந்து, பின்பு தன் வல்லமையைப் பிரயோகித்து அவளை காட்டிக் கொடுத்துவிட்டான். அதே சாத்தான் இயேசுவின் காலத்தில் யூதாஸின் ரூபத்தில் காணப்பட்டான். அந்த முதலாம் காலத்தில் சாத்தானின் ரூபம் அதுதான். அவன் யார்? அந்த காரியம், பலவீனமான இடம் எது என்று அவன் கண்டுபிடிக்கும் வரையில், வார்த்தையுடன் ஒத்துப் போவான்.

202. இன்று அவன் பலவீனம் எங்கு காணப்படுகிறது என்பதை காண காத்துக்கொண்டிருக்கிறான்.

ஆராதனைகளில் கூடவேயிருந்து அந்த சிறு பலவீனப்பகுதி காணப்படுமளவும் கவனித்திருந்து, ’ அதோ அதுதான், அதுதான், அந்தவிதமாகத்தான் அது செய்யப்பட்டது” என்று கூறுவான். பாருங்கள்? அது அவ்வித மாகவேதான் உள்ளது.

203. அன்றிரவு நடந்த கூட்டத்தில் மேடையின் மேல் வந்த அந்த மனிதனின் காரியத்தை குறித்து உங்களுக்கு ஞாபகமிருக்கும் என்று எண்ணுகிறேன். ஜெப அட்டைகளைக் குறித்தக் காரியம் ஒரு மனோவசியம் என்று அவன் எண்ணியிருந்தான். அதை

சோதித்தறி வதற்கு அவனுக்கு எல்லா உரிமையுமிருந்தது என்றும் அவன் எண்ணியிருந்தான். இந்த மனிதன் முழு சுவிசேஷத்தையும் விசுவாசியாத ஓர் ஸ்தாபனத்தின் அங்கத்தினன். அவன் என்னை சோதித்தறியும்படி மேடையின் மேல் வந்தபோது, நான் மிகவும் களைத்தவனாயிருந்தேன்.
ஊழியர்கள் என்னை அங்கிருந்து அப்புறப்படுத்த ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர்.

204. அது ஒண்டாரியோவிலுள் வின்ட்சர் என்னுமிடத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் டெட்ராய்ட் என்ற இடத்திலிருந்து வின்ட்சர் இடத்திலுள்ள ஒரு பெரிய அரங்கம்.

205. இந்த மனிதன் மங்கின நிறமுடைய உடையும் சிகப்பு கழுத்துப்பட்டையும் அணிந்தவனாக அங்கு மேடையில் வந்தான். அவன் மிகவும் சாமர்த்தியமுள்ளவனாய் காணப்பட்டான். அப்பொழுது நான் அவனை நோக்கி, "நல்லது, ஐயா நான் உம் கையை பிடிக்க அனுமதிப்பீராக. நான் அநேக தரிசனங்களைக் கண்டு மிகவும் களைத்தவனாயிருக்கிறேன்" என்று கூறினேன். அவன் தன் கரத்தை என் கரத்தில் வைத்தான். அப்பொழுது நான் அவனை நோக்கி, "ஐயா உங்களுக்கு எந்த வியாதியும் இல்லை" என்று கூறினேன். அதற்கு அவன்,

எனக்கு இரண்டு வியாதியுண்டு' என்று கூறினான்.

206. அதற்கு நான், "எங்கே நான் மறுபடியும் பார்க்கட்டும்" என்று கூறி அவனுடைய கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு, "இல்லை ஐயா வியாதிக்குரிய அடையாளங்கள் காணப்படவில்லை. ஆகவே, நீ ஒரு சுகதேகியான மனுஷன்" என்றேன். அதற்கு அவன், 'என்னுடைய ஜெப அட்டையில் என்ன எழுதி யிருக்கிறதென்று வாசியும்" என்று கூறினான்.

207. அப்பொழுது நான், "ஜெப அட்டையில் நீர் என்ன எழுதி

வைத்திருந்தாலும், அதைக் குறித்து எனக்கு கவலையில்லை. ஜெப அட்டைக்கும் என்னுடைய ஊழியத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை" என்று கூறினேன். நான் ஒன்றையும் அறியாதவனாக இவ்விதம் கூறிக்கொண்டிருந்தேன். மேலும் நான் மிகவும் களைத்து சோர்ந்து போயிருந்தேன். ஆனால் தேவனுடைய கிருபையானது இன்னுமாக இங்கிருந்தது என்று ஞாபகம் கொள்ளுங்கள்.

208. அவர் உன்னை அனுப்புவாரென்றால், உன்னை முற்றிலுமாக காக்க வேண்டியது அவருடைய பொறுப்பாகும். அது

என்னுடைய காரியம் அல்ல. அவரே அதன் காரணர். அவரே என்னை அனுப்பினார். சத்தியம் எதுவோ அதற்காக மட்டும் நிற்பதே என்னுடைய வேலையாகும்.

209. மோசே தன்னுடைய கோலை அங்கே போட்டபொழுது அது சர்ப்பமாயிற்று. மந்திரவாதிகளும் அதே காரியத்தை செய்தனர். தேவனுடைய கிருபைக்காக மோசே அங்கு காத்து நிற்பதைத் தவிர வேறு என்ன செய்திருக்க முடியும்? அவ்வளவே. அவன் அவருடைய கற்பனைகளை கைக்கொண்டான். பின்பு நடந்த சம்பவம் என்னவென்று

உங்களுக்குத் தெரியுமல்லவா? பாருங்கள்?

210. அதுபோலத்தான் இச்சம்பவமும். இந்த மனிதன் அங்கு நின்று கொண்டு, "என்னுடைய ஜெப அட்டையை பாரும்" என்று கூறினான்.

211. அதற்கு நான், "நல்லது, நீங்கள் அதிக விசுவாசத்தையுடைய வராயிருந்திருக்கின்றீர். ஆகவே உம் வியாதிகள் சுகமாக்கப்பட்டிருக்கும்" என்று எதையும் யோசியாதவனாய் கூறினேன்.

212. இதை நான் கூறினவுடனே அந்த மனிதன் தன் மேற்சட்டை பொத்தனை கழற்றி,

தன்னுடைய நெஞ்சை முன்னுக்குத் தள்ளி சபையோர்களிடம் திரும்பி, "எல்லோரும் இங்கே கவனியுங்கள்" என்றான். அப்பொழுது நான், "இங்கே என்ன நடந்து கொண்டிருக் கிறது" என்று யோசித்தேன்.

213. அவன் அவ்விதம் சபையாரின் கவனத்தைத் திருப்பி, "இங்கே நடக்கும் தந்திரத்தைப் பார்த்தீர்களா?" என்று கேட்டான். (அதுதான் யூதாஸின் ஆவி – இவன் ஒரு பயபக்தியுள்ள மனிதனாகவும் ஒரு ஸ்தாபனத்தின் பிரசங்கியாயுமிருந்தான்). அவன் மேலும் தொடர்ந்து, "எனக்கு அதிக விசுவாசம் இருக் கிறது என்று இவர் கூறுகிறார். இவர் அதிகமாக

பெலவீனப்பட்டு விட்டதினால் மனோவசியம் செய்ய முடியவில்லை. இனிமேலும் மனோவசிய சக்தி இவரிடம் போவதில்லை. என் வியாதிகள் என்னவென்று நான் ஜெப அட்டையில் எழுதியிருக்கிறேன். அதிலுள்ளதைக் கூட இவரால் கூறமுடியவில்லை. இது ஒரு ஏமாற்றுவித்தை" என்று கூறினான்.

214. அப்பொழுது நான், "என்ன நடந்து கொண்டிருக்கிறது?" என்று யோசித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது அங்கே தேவனுடைய கிருபையானது தாழ இறங்கி வந்தது.

215. அப்பொழுது நான் அவனைப் பார்த்து, ”ஐயா, தேவனை ஏமாற்றும்படி சாத்தான் உன் இருயத்தை நிரப்பினதென்ன?” என்று கேட்டேன். அவன் ஒரு நவநாகரீக யூதாஸாயிருந்தான். நான் மேலும் அவனை நோக்கி, ’அமெரிக்காவிலுள்ள கிறிஸ்து சபை (Church Of Christ)யில் நீ ஒரு பிரசங்கியாயிருக்கிறாய். அதோ அங்கே நீல நிற உடையணிந்தவருடனும், அவருடைய மனைவியுடனும் அமர்ந்திருப்பது உன் மனைவியாகும். கடந்த இரவு நீங்கள் ஒரு மேஜையின் முன்பு அமர்ந்திருந்தீர்கள். அந்த

மேஜையின் மேல் போட்டிருந்த விரிப்பின் நிறம் பச்சை. இந்த ஊழியமானது மனோவசிய சக்தியினால் செய்யப்படுகிறதா என்பதை சோதித்தறியும்படி நீங்கள் தீர்மானித்ததின் பலனாக நீ இந்த இரவிலே இங்கு வந்திருக்கிறாய்" என்று கூறினேன்.

216. அதற்கு அந்த மனிதன், "நீங்கள் கூறினது உண்மையும் சத்திய முமாயிருக்கிறது. கர்த்தர் என் மேல் கிருபையாயிருப்பாராக" என்றான்.

217. நான் மேலும் தொடர்ந்து, "ஐயா, அந்த ஜெப அட்டையில் நீர் காசநோய் என்றும், புற்று நோய்

என்றும் எழுதியிருக்கிறீர்; அந்த இரண்டு வியாதிகளையும் இந்த கணமே நீர் பெற்றுக் கொள்கிறீர், அது உமக்குச் சொந்தமானது" என்று கூறினேன். அப்பொழுது அந்த மனிதன் என்னுடைய கால்களைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, "நான் அவ்விதம் நோக்கம் கொள்ளவில்லை. "ஐயா" என்று கதறினான்.

218. அதற்கு நான், "என்னால் எந்தவித உதவியும் செய்ய முடியாது... நீங்கள் போகலாம். இது உமக்கும் தேவனுக்குமிடையேயுள்ள காரியம். உம்முடைய அழிவை நீரே ஜெப அட்டையில் எழுதிவிட்டீர்" என்று கூறினேன். அந்த இரண்டு

வியாதிகளும் அவனை பிடித்துக் கொண்டது. அதுவே அவனுடைய முடிவாயிற்று.

219. கவனியுங்கள், இந்த பாவனை விசுவாசிகள், ஏமாற்றுக்காரர்களாயிருந்து, தேவனோடும் அவருடைய வார்த்தையோடும் குற்றம் கண்டுபிடிக்க முயற்சிக்கிறார்கள்! அவர்கள் யூதாஸாயிருக்கின்றார்கள். யூதாஸ் எவ்விதம் வெளிப்பட்டான் என்று உங்களால் காண முடிகின்றதா? பாருங்கள்? அவன் எவ்விதம் வெளிப்பட்டான். பாவனை விசுவாசிகளும் அவ்விதமே வெளிப்படுவர். அவர்கள் மெத்த படித்தவர்கள். வார்த்தைக்கும்

சமயகோட்பாட்டிற்கும் நடுவே ஒரு மகத்தான நிரூபித்தலானது வரும்போது இந்த பாவனை விசுவாசிகள் தங்கள் முன்னோடியான யூதாஸைப் போன்று தங்களை ஸ்தாபனத்திற்கு விற்று விடுகின்றனர். யூதாஸ் தன்னை வார்த்தையின் பாகமென்று உரிமைக்கொண்டாடின போதிலும், அவன் வார்த்தையாகிய இயேசுவை தன் ஸ்தாபனத்திற்குக் காட்டி கொடுத்துவிட்டான்.

★★★★★

# உதவிக்காக கூப்பிடும் ஆவி

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

ஒரு நிமிடம், அது இந்த பெண் அல்ல. இப்பொழுது, ஒரு க்ஷணம், இப்பொழுது ஒவ்வொருவரும் பயபக்தியாயிருங்கள். சாத்தான் ஏதோ ஒன்றை செய்ய முயன்றான். இதோ அது. கட்டி, கட்டி, உங்கள் இருவருக்கும் இருக்கின்றது. அது சரி. உங்களுக்கும் கட்டி இருக்கின்றது; அவளுக்கும் கட்டி இருக்கின்றது, ஆகவே **ஒருவரை நோக்கி ஒருவரிடம் பிசாசு உதவிக்காக கூச்சலிடுகின்றது**. **ஆனால் பரிசுத்த ஆவியானவரும் சத்தமிடுகின்றார்.** நீங்கள் யாரை விசுவாசிக்கப் போகின்றீர்கள், அவர்? சரி. ஸ்திரீயே அந்த கட்டிலிலிருந்து எழுந்து கொள். படுக்கையிலிருந்து எழும்பும். அதை விட்டெழுந்து விசுவாசி. **இப்பொழுது அவரை விசுவாசித்துக் கொண்டே செல்.** ஆமென்.

*செய்தி:* கடல் பயணத்தில் சாட்சி, மார்ச் 7, 1964

★★★★★

நம்முடைய கர்த்தராகிய இயேசுவால் காசநோயையோ (TB), எதையுமோ எடுத்துப் போட முடியுமானால், அது அவருக்கு அவ்வளவு எளிதாக உள்ளது. அது சரி அல்லவா? நீர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்த போதே, சுகமடைந்து விட்டீர், அந்தக் காசநோய் உம்மை விட்டுப் போய் விட்டது. எனவே நீங்கள் களிகூர்ந்தபடியே உங்கள் பாதையில் சென்று, "தேவனுக்கு நன்றி" என்று கூறுங்கள். ஆமென்.

ஆமென். நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

**இப்பொழுது, இதோ இரண்டு ஆவிகள் ஒன்று மற்றொன்றை அழைத்துக் கொண்டிருக்கின்றன.** என்னுடைய அருமையான கூட்டத்தாரால் மாத்திரம் இந்த பரிமாணத்திற்குள் இருந்து இதைப்பார்க்க முடிந்திருக்க வேண்டும் என்பதே என்னுடைய - என்னுடைய ஒரே விருப்பமாக உள்ளது. அங்கே தன்னுடைய கரங்களைக் குறுக்காக வைத்துக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கும் அந்தப் பெண்மணி அவதிப்பட்டு கொண்டிருக்கும் அதே வியாதியால் தான் இங்கே நின்று கொண்டிருக்கும் இந்தப் பெண்மணியும் அவதிப்படுகிறாள், சரியாக அதேவிதமாகவே. **இதோ ஒரு இருண்ட வரி உள்ளது**. **ஏனென்றால் இந்தப் பெண்மணியின் மேல் இருக்கும் ஆவியானது இந்த ஆவியை நோக்கி உதவிக்காக கூப்பிட்டு கொண்டிருக்கிறது**. ***இவை இரண்டுமே ஒரே வியாதி தான்: இரண்டுமே கீல்வாத நோய் தான்*** (arthritis). இப்பொழுது நீ உன்னுடைய பாதையில் போகலாம். உன்னுடைய கைக்குட்டையை வைத்திருக்கும் சீமாட்டியே, உன்னுடைய காலூன்றி எழுந்து நில். அங்கே தான் காரியம். அது உன்னை விட்டுப் போய்விட்டது. இப்பொழுது, உன்னுடைய பாதையில் களிகூர்ந்தபடியே சென்று, சந்தோஷமாயிரு.

***செய்தி:*** மிக இருண்ட வேளை, அதற்குப் பிறகு இயேசு வருகிறார், நவம்பர் 14, 1955, பத்தி எண் 109

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

# சகோ.பிரன்ஹாம் தம்முடைய பேரப்பிள்ளைகளின் பிறப்பைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்தல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: யார் இந்த மெல்கிசேதேக்கு?, பிப்ரவரி 21, 1965, பத்தி எண் 14-16

குழந்தைகளை பிரதிஷ்டை செய்வதைக் குறித்து, என்னுடைய சிறிய பேரப்பிள்ளையையும் இக்கூட்டத்தில் பிரதிஷ்டை செய்ய வேண்டி இருந்தது. சிறிய டேவிட் **(David)** ஐ பிரதிஷ்டை செய்ய எனக்கு நேரமில்லை. நான் இப்பொழுது இரண்டாவது முறையாக தாத்தாவாக இருக்கிறேன். மிஸ்டர் மே **(Mr. May)** இந்த இரவு இங்கிருப்பாரானால், நான் வெகு விரைவில் உபயோகப்படுத்த வேண்டும் போல் அவர் எனக்கு ஒரு பிரம்பு கைத்தடியை கொடுத்தார். ஆகவே...

நான் பில்லியை பார்த்து, "நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்

என்று வேதம் கூறியிருப்பது உண்மை தான். ஆனால் முழு பாரமும் உன்மீது வைக்கப்படவில்லை'' என்று கூறினேன். இந்தப் பேரபிள்ளைகள் வேகமாக தோன்றுகிறார்கள்.

என்னுடைய மருமகள் முதலில் மலடியாக இருந்தாள். அவளுக்கு பிள்ளைகள் இருந்திருக்க முடியாது. ஒரு நாள் கூட்டத்தை விட்டு செல்லும்போது, "லாய்ஸ், நீ ஒரு குமாரனைப் பிறப்பாய். கர்த்தர் உன்னை ஆசீர்வதித்திருக்கிறார். உன்னுடைய பெண்மைக்குரிய குறைவு நீங்கி விட்டது,'' என்று கர்த்தர் என்னிடம் கூறினார். ஒன்பது மாதங்கள் கழித்து சிறிய பால் பிறந்தான்.

இந்தக் குழந்தை பிறப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன், ஒரு, ஒருநாள் காலை, காலை உணவை மேஜையில் அருந்திக் கொண்டிருந்தேன். லாய்சும்,

பில்லியும் மேஜையில் எனக்கு முன்பாக உட்கார்ந்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது லாய்ஸ் ஒரு குழந்தையை இளஞ்சிவப்பு அல்லது நீல நிற கம்பளியால் சுற்றியிருக்கும் ஒரு சிறு குழந்தைக்கு பால் கொடுத்துக் கொண்டிருப்பதை நான் கண்டேன். பில்லி ஒரு மூலையில் உட்கார்ந்துக் கொண்டு சிறிய பால் **(Paul)** க்கு உணவு ஊட்டிக் கொண்டிருந்தான். நான் பில்லியைப் பார்த்து, "பில்லி, நீல நிற கம்பளியினால் சுற்றப்பட்டிருக்கும் ஒரு குழந்தைக்கு லாய்ஸ் பால் கொடுத்துக் கொண்டிருப்பதை இப்பொழுது தான் ஒரு தரிசனத்தில் கண்டேன்" என்றேன்.

அதற்கு அவன், "நான் வேட்டையாட போக வேண்டி இருக்கும். அதற்கு இப்பொழுதிலிருந்து இன்னும் ஒன்பது

மாதங்கள் இருக்கின்றன" என்று கூறினான்.

பதினொரு மாதங்களுக்குப் பிறகு சிறிய டேவிட் பிறந்தான். நான் இன்னும் அவனை கர்த்தருக்கு பிரதிஷ்டை செய்ய முடியவில்லை. நாங்கள் மீண்டும் வரும்வரை அதை செய்ய முடியாது. ஆகவே, அது நாங்கள் எந்த நிலைமையில் இருக்கிறோம் என்பதை நீங்கள் அறிந்துக் கொள்ள செய்கிறது.

★★★★★

# இயற்கைக்கு மேம்பட்டவைகள் 6

## சகோதரி. ஹாட்டி ரைட்டின் மகன்கள் இரட்சிக்கப்படுதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: நான் கேள்விப்பட்டேன் இப்பொழுதோ காண்கிறேன், நவம்பர் 27, 1965 மாலை, பத்தி எண் 151-165

இப்பொழுது ஜெபர்ஸன்வில்லில் கேட்டுக்கொண்டிருப்பது, ரைட் என்னும் பெயர் கொண்ட ஒரு குடும்பம். சகோ. உட்டும் நானும் அவர்களை காணச் சென்றிருந்தோம். அவர்கள் சபை இராப்போஜனத்துக்கு திராட்சைரசம் தயாரிப்பவர்கள். சிறிய ஈடித் அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் ஊனமுள்ள (crippled) ஒரு சிறுபெண், தன் வாழ்நாள் முழுவதும் வியாதியாயிருந்தாள், அவளைச் சுகப்படுத்த வேண்டுமென்று நாங்கள் எப்பொழுதுமே தேவனிடம் முறையிட்டதுண்டு. அவளுடைய சகோதரி ஒரு விதவை. அவளுடைய கணவர் கொல்லப்பட்டார். அவளுடைய பெயர் ஹாட்டி, மிகவும் தாழ்மையுள்ள ஸ்திரீ. நானும் சகோ. பாக்ஸூம் அவளுக்காக ஒரு முயலை வாங்க சென்றிருந்தபோது, அவர்கள் உணவு சமைத்து

நாங்கள் சாப்பிட வேண்டுமென்று கேட்டு கொண்டனர்.

நாங்கள் எல்லோரும் மேசையைச் சுற்றிலும் உட்கார்ந்து கொண்டு, சில நாட்களுக்கு முன்பு நடந்த இந்த சம்பவத்தைக் குறித்து பேசிக்கொண்டிருந்தோம். நான் மேசையினருகே உட்கார்ந்து இதைக் குறித்து பேசிக்கொண்டிருந்த போது, திடீரென்று நான், "என்ன நடந்திருக்க முடியும்? சகோ. ரைட், நீங்கள் வயோதிபர். உங்கள் வாழ்நாள் முழுவதும் நீங்கள் அணில் வேட்டையாடியிருக்கிறீர்கள். சகோ. ஷெல்பி, அணில் வேட்டையாடுவதில் நீர் நிபுணர். சகோ. உட், நீங்களும் அப்படித்தான். நானும் என் சிறுவயது முதற்கொண்டே அணில் வேட்டையாடி வந்திருக்கிறேன், நீங்கள் எப்பொழுதாவது அணில் காட்டத்திமரப் புதரிலும் வேலமரப் புதரிலும் கண்டதுண்டா?" என்று கேட்டேன்.

"இல்லை, ஐயா" என்றனர்.

நான், “அவை அங்கிருக்கவில்லை. எனக்குத் தெரிந்த ஒன்றே ஒன்று, அது அதே தேவன். ஆபிரகாமுக்கு ஆட்டுக்கடா தேவைப்பட்டபோது, அவர் யேகோவாயீரேவாக இருந்தார். அவர் தமக்கென்று ஒன்றை அளிக்க முடிந்தது. அதே காரியம் நிகழ்ந்தது என்று நான் விசுவாசிக்கிறேன்” என்றேன்.

அங்கு உட்கார்ந்து கொண்டிருந்த அந்தசிறு ஹாட்டி, “சகோ. பிரான்ஹாமே, அது உண்மையன்றி வேறொன்றுமில்லை” என்றாள்.

அவள் சரியானபடி கூறினாள். அவள் அதைக் கூறின போது, பரிசுத்த ஆவியானவர் அந்த வாய்க்காலுக்குள் மறுபடியும் வந்தார். அங்கிருந்த ஒவ்வொருவரும், அதை உணர்ந்தனர். நான் எழுந்து நின்று, “சகோதரி ஹாட்டி, **கர்த்தர் உரைக்கிறதாவது**, நீ அந்த சீரோபேனிக்கியா தேசத்து ஸ்திரீயைப் போல் சரியான வார்த்தையைக் கூறினாய். பரிசுத்த ஆவியானவர் என்னிடம் இப்பொழுது பேசி, உன் இருதயத்தின் வாஞ்சையை உனக்கு

அருளும்படி கூறுகிறார். நான் தேவனுடைய ஊழியக்காரனாயிருந்தால், அது நிறைவேறும். நான் தேவனுடைய ஊழியக்காரனாக இல்லாமற் போனால், நான் ஒரு பொய்காரன், அது நிறைவேறாது, நான் வஞ்சகன். இது தேவனுடைய ஆவியா இல்லையா என்று சோதித்துப் பார்'' என்றேன்.

அவள், ''சகோ, பிரான்ஹாம்'' என்றாள். (எல்லோரும் அழுதனர்). அவள், ''நான் என்ன கேட்பது?'' என்றாள்.

நான், ''ஊனமுள்ள உன் சகோதரி இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறாள்'' என்றேன்.

அவள் நன்கொடையாக அளித்த இருபது டாலர்களை அவளிடம் திருப்பிக் கொடுப்பதற்காக என் ஜேபியில் வைத்திருந்தேன். அந்த ஸ்திரீ அவளுடைய எளிய சிறுபண்ணையிலிருந்து ஆண்டொன்றுக்கு இருநூறு டாலர்கள் வருமானம் கூட பெறுவதில்லை. அவளுக்கு இரண்டு பையன்கள் இருந்தனர். அவர்கள் பள்ளிக்கூட நாட்களில், 'ரிக்கி'களாக இருந்து,

அவர்களுடைய தாயை துன்புறுத்தி வந்தனர் - பதினைந்து, பதினாறு வயதுடையவர்கள், அவர்கள் அங்கு நின்று கொண்டு நான் கூறுவதைக் கேட்டு கேலியாக சிரித்தனர்.

நான், "உனக்கு வயோதிப பெற்றோர் உள்ளனர். உன்னிடம் பணம் இல்லை. நீ பணத்தைக் கேட்டு, அது உன் மடியில் வருகிறதா என்று பார். உன் சகோதரியின் சுகத்தைக் கேள். அவள் எழுந்து நடக்கிறாளா இல்லையாவென்று பார்" என்றேன். ஆவியின் ஊக்கம் வரும்போது, அதை அறிந்து கொள்ள முடியுமென்று யோபைப் போல் நானும் அறிந்திருந்தேன். நான், "இதோ இங்கு பத்து பேர்களுக்கு முன்பாக நான் நின்று கொண்டிருக்கிறேன். இது நிறைவேறவில்லையென்றால், நான் ஒரு கள்ளத் தீர்க்கதரிசி" என்றேன்.

அவள், "நான் என்ன கேட்பது?" என்றாள்.

நான், "நீ செய்யப் போகும் தீர்மானம் உன்னைப் பொறுத்தது. உனக்காக நான் தீர்மானம் செய்ய முடியாது" என்றேன்.

அந்த ஸ்திரீ சுற்றுமுற்றும் பார்த்தாள். திடீரென்று அவள், "சகோ, பிரான்ஹாமே, என் இருதயத்திலுள்ள மிகப் பெரிய வாஞ்சை என் இரு பையன்களின் இரட்சிப்பே" என்றாள்.



"இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே, உன் பையன்களை உனக்குத் தருகிறேன்" என்றேன். அங்கு சிரித்து, கேலி செய்து கொண்டிருந்த அந்த பையன்கள், அவர்களுடைய தாயின்

மடியில் விழுந்து, தங்கள் வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணித்து, அந்த நேரத்திலேயே பரிசுத்த ஆவியினால் நிறைக்கப்பட்டனர். அந்த நேரத்திலேயே!

ஏன்? இது உண்மை. இது தவறாயிருக்குமானால் இந்த தேசத்திலுள்ள ஜனங்களுக்கு முன்பாக என்னைக்கொன்று போட தேவனுக்கு அதிகாரமுண்டு. இங்குள்ள உங்களில் அநேகரும், ஜெபர்ஸன்வில்லில் உள்ளவர்களும்; ஜெபர்ஸன்வில் கூடாரம் “ஆமென்” என்று இப்பொழுது ரீங்காரம் செய்வதை என்னால் கேட்முடிகிறது. ஏனெனில் அவர்கள் அங்கு உட்கார்ந்து கொண்டு இதைக்கேட்டுக் கொண்டிருக்கின்றனர். இது உண்மை! அது என்ன? தேவன் தமது இராஜாதிபத்திய கிருபையினால் அருளும் போது, அது நிறைவேறுகிறது. அதற்கு புறம்பே அது நிறைவேறுவதில்லை.

★★★★★



சகோதரி. ஹாட்டி ரைட்



சகோதரி. ஹாட்டி ரைட்டின் சகோதரி ஈடித்



சகோதரி.ஹாட்டி ரைட்டின் இரண்டு மகன்களும் ஞானஸ்நானம் பெறுதல்

# ஒரு சகோதரி யிடமிருந்து பெரிய வௌவால் வடிவத்தில் பிசாசு வெளியேறுதல்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

ஒரு சமயம் இங்கு ஒரு சிறு பெண் இருந்தாள். இன்றைக்கும் கூட அவள் இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கலாம். அவளுடைய பெயர் நெல்லி சான்டர்ஸ். முதன் முறையாக பிசாசு துரத்தப்பட்டதை நான் கண்டிருக்கிறேன் என்றால் (நாங்கள் கல்லறைத் தோட்டத்துக்கு அப்பால் மூன்று பிளாக்குகள் தள்ளி குடியிருந்தோம். அப்பொழுது தான் நான் ஒரு பிரசங்கியானேன். நான் இந்த மூலையில் ஒரு கூடாரக் கூட்டத்தில் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன் அந்த சிறு பெண் மிகச் சிறந்த நடனக்காரி. அவள் இங்குள்ள உயர்நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தாள். அவளும் லீஹார்னும் (இந்தப் பட்டினத்திலுள்ள உங்கள் அநேகருக்கு லீஹார்னைத் தெரியும். அவன் குளிக்கும் அறை ஒன்றை நடத்தி வருகிறான். அவளும் லீ ஹார்னும் நாட்டிலேயே மிகச் சிறந்த நடன ஜோடி, அவன் ஒரு கத்தோலிக்கன். அவர்களுக்கு மதம் ஒருபொருட்டல்ல. எனவே (நெல்லியும் மற்றவர்களும், அவள் சிறந்த நடனக்காரி, அவனும் கூட. அங்கு ப்ளாக் பாட்டம், 'ஜிட்டர்பர்க்ஸ் போன்ற நடனங்கள் ஆடப்பட்டன. இவர்களிருவரும் நாட்டிலேயே மிகச்சிறந்த நடனக்காரர்கள்.

ஒருநாள் (ஒரு இரவு) அவள் தடுமாறிக்கொண்டு கூட்டத்திற்கு வந்தாள். அந்த சிறு நெல்லி பீடத்தின் முன்னால் முகங்குப்புற விழுந்தாள். தேவன் அவளை ஆசீர்வதிப்பாராக. அவள் பீடத்தின் முன்னால் விழுந்துகிடந்து, தலையை தூக்கி அழ ஆரம்பித்தாள்.

அவளுடைய கண்ணீர் கன்னங்களில் வழிந்தது. அவள், “பில்லி” என்றாள் அவளுக்கு என்னைத் தெரியும்). அவள், “நான் இரட்சிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன்” என்றாள்.

நான், “நெல்லி, நீ இரட்சிக்கப்பட முடியும். பெண்ணே, இயேசு உன்னை ஏற்கனவே இரட்சித்து விட்டார். அவருடைய வார்த்தையின் அடிப்படையில் அதை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும்” என்றேன். அவள் அங்கு தங்கியிருந்து, அழுது, ஜெபித்து, உலக காரியங்களுக்கு மறுபடியும் செவி கொடுப்பதில்லையென்று தேவனிடம் வாக்கு கொடுத்தாள். உடனே அவளுடைய ஆத்துமாவில் ஒரு அழகான இனிமையான சமாதானம் குடிகொண்டது. அவள் எழுந்து சத்தமிட்டு, தேவனைத் துதித்து, அவரை மகிமைப்படுத்தினாள்.

அதற்கு பின்பு ஆறு அல்லது எட்டு மாதங்கள் கழித்து, ஒரு இரவு அவள் ஸ்பிரிங் தெரு வழியாக வந்து கொண்டிருந்தாள் இப்பொழுது அவள் வாலிபப் பெண், அவளுக்கு அப்பொழுது சுமார் பதினெட்டு வயதிருக்கும். அவள் என்னிடம் வந்து, “ஹோப்...” (அது என் மனைவி. அவள் மரித்துவிட்டாள்). அவள், “காண்பதற்கு நான் ஹோப்பையும் ஐரீனையும் போல் இருந்திருந்தால் நலமாயிருக்கும். அவர்கள் உலக காரியங்களில் சிக்கிக்கொண்டதேயில்லை” என்றாள். அவள், “உலகம் நம்மேல் ஒரு அடையாளத்தை போட்டுவிடுகிறது. எனக்கு கரடுமுரடான தோற்றம் உள்ளது. நான் முகவர்ணம் தீட்டிக்கொள்வதைவிட்டு விட்டேன். ஆயினும் என்

முகம் கரடுமுரடாக காணப்படுகிறது. அவர்களுடைய முகம் எவ்வளவு இளமையாயும் களங்கமற்றதாகவும் காணப்படுகிறது! நான் அப்படி செய்யாமலிருந்தால் நலமாயிருக்கும்" என்றாள்.

நான், "நெல்லி, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களினின்றும் சுத்திகரிக்கிறது. தேனே, நீ சென்று விசுவாசி" என்றேன்.

வேய்ன் ப்ளட்ஸோ (அவனை உங்களில் அநேகருக்கு தெரியும். அநேக ஆண்டுகளாக அவன் என் ஆப்த நண்பன்). அவன் பயங்கர குடிகாரனாயிருந்தான். என் சகோதரன் எட்வர்ட்டுடன் அவன் இங்கு வந்திருந்தான். அவன் குடித்து தெருவில் விழுந்து கிடந்தபோது, அவனை நான் தூக்கிக்கொண்டு வந்தேன். ஏனெனில் போலீசார் அவனைக் கைது செய்ய முயன்றனர். அவனை இங்கு கொண்டு வந்தேன். அப்பொழுது நான் ஒரு பிரசங்கி. என் பெற்றோருடன் வசித்து வந்தேன். அது எனக்கு விவாகமாவதற்கு அநேக ஆண்டுகட்கு முன்பு. நான் அவனைக் கொண்டு வந்து படுக்கையில் கிடத்தினேன். நான் சாய்வு நாற்காலியில் உறங்கினேன். பிரன்ஹாம் குடும்பம் பெரியது என்று உங்களுக்கு தெரியும் (நாங்கள் பத்து பேர்). எங்களுக்கு நாலு அறைகள் இருந்தன. என்னிடம் ஒரு பழைய சாய்வு நாற்காலி இருந்தது. நான் அதை இழுத்து, அதில் உறங்கினேன். குடித்திருந்த வேய்னை நான் படுக்கையில் கிடத்தினேன். அவனை வீட்டுக்குத் தூக்கிக்கொண்டு வந்து படுக்கையில் கிடத்த வேண்டியதாயிற்று. நான் அங்கு படுத்துக் கொண்டிருந்தேன். நான், "வேய்ன்,

இப்படி செய்வது உனக்கு வெட்கமாயில்லையா?" என்று கேட்டேன்.

அவன், "உ, து, பில்லி, என்னிடம் அப்படி பேசாதே", என்றான் (சகோ. பிரன்ஹாம் குடிகாரன் உளறுவதைப்போல் பேசி காண்பிக்கிறார் - ஆசி). நான் அவன் மேல் என் கையை போட்டு, "வேய்ன், உனக்காக நான் ஜெபிக்கப்போகிறேன். கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக" என்றேன்.

நான் இரட்சிக்கப்பட்டு அப்பொழுது ஏறக்குறைய ஒரு ஆண்டு காலம் தான் ஆகியிருந்தது. அப்பொழுது திடீரென்று வாடகை காரின் கதவு திறக்கப்பட்டு வேகமாக மூடும் சத்தம் கேட்டது, யாரோ கதவை வேகமாக தட்டி, சகோ. பில், சகோ. பில் என்று கூப்பிடுவது கேட்டது (சகோ. பிரன்ஹாம் பிரசங்க பீடத்தை பதினைந்து தடவை தட்டுகிறார் - ஆசி). –

நான், "இது என்ன, யாரோ மரித்துக் கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது என்று எண்ணினேன். நான் கதவினருகே ஓடினேன். என் பழைய துணிகளை எடுத்து, என் பைஜாமாவின் மேல் சுற்றிக்கொண்டு, வேய்னையும் போர்த்திவிட்டு, கதவினருகே ஓடினேன். அது பெண்ணின் குரல் போன்றிருந்தது. நான் கதவைத்திறந்தபோது, இந்த வாலிபப் பெண் அங்கு நின்று கொண்டிருந்தாள். அவள், "உள்ளே வரலாமா?" என்று கேட்டாள். நான், "உள்ளே வா" என்று சொல்லி விளக்கைப் போட்டேன்.

அவள் அழுது கொண்டே, “ஓ, பில், பில்லி, நான் முடிந்து போனேன்,! நான் முடிந்து போனேன்!” என்றாள்.

“என்ன நேர்ந்தது, நெல்லி மாரடைப்பு ஏதாகிலும் ஏற்பட்டதா?” என்று கேட்டேன்.

அவள், “இல்லை, சகோ. பில். நான் ஸ்பிரிங் தெரு வழியாக வந்து கொண்டிருந்தேன். உண்மையில் சகோ.பில், உண்மையில் சகோ. பில், நான் தவறு செய்ய வேண்டுமென்று நினைக்கவேயில்லை, நான் தவறு செய்ய வேண்டுமென்று நினைக்கவேயில்லை” என்றாள்.

நான், “என்ன நேர்ந்தது?” என்று கேட்டேன். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. நான் அப்பொழுது ஒரு வாலிபன். நான் நினைத்தேன் ......

அவள், “ஓ, சகோ. பில், நான் சின்னா பின்னமாகிவிட்டேன்” என்றாள்.

நான், “அமைதியாயிரு, சகோதரியே, நடந்ததை கூறு” என்றேன்.

அவள், “நான் தெருவின் வழியாக நடந்து ரெட்மென் அரங்கத்தை அடைந்தேன்...” என்றாள் (அங்கு சனிக்கிழமை இரவுகளில் நடனம் நடப்பது வழக்கம்). அவள், “என் உடைகளுக்காக துணி வாங்கிக் கொண்டு திரும்பும்போது, இசையைக் கேட்டேன்,” மேலும் அவள், “உங்களுக்கு தெரியுமா?” என்றாள். “நான் ஒருநிமிடம் அங்கு நின்றேன். அது இனிமையாகிக் கொண்டே இருந்தது. அங்கு நின்றால் தவறொன்றுமில்லை” என்று நினைத்தேன்.

அங்குதான் அவள் தவறு செய்தாள் - சற்று நேரம் அங்கு நின்றாள்.

அவள் இசையைக் கேட்டுக்கொண்டேயிருந்தாள். அவள், "ஓ, ஆண்டவரே, உம்மை நான் நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர். நானும் நீயும் இந்த இடத்தில் நடன போட்டிகளில் எத்தனையோ விருதுகளை வென்றது. என் ஞாபகத்துக்கு வருகிறது. அந்த இசை முன்பு என்னைக் கவர்வது வழக்கம். ஆனால் இப்பொழுது இல்லை" என்று நினைத்தாள். ஓ, ஓ! ஓ, ஓ! அது உன்னைக் கவரவில்லை என்றா நினைக்கிறாய்? அது ஏற்கனவே உன்னைக் கவர்ந்துவிட்டது. அவன் உன்னை நடன கூடத்திற்கு அனுப்பினதற்கு அது சமானம். பாருங்கள்?

எத்தனை பேருக்கு நெல்லி சான்டர்ஸை தெரியும்? நல்லது, உங்கள் அனைவருக்கும் என்று நினைக்கிறேன். ஆம், நிச்சயமாக! எனவே அவர்கள்.... அவள் தொடர்ந்து, "என்ன நேர்ந்தது தெரியுமா? நான் அரங்கத்தின் படிகளில் ஏறிச் சென்றால், ஒரு சிலருக்கு என் சாட்சியை அறிவிக்க முடியும் என்று நினைத்தேன்" என்றாள்.

பார், நீ பிசாசின் எல்லைக்குள் சென்றுவிட்டாய், அதனின்று விலகு! பொல்லாங்கானதாய் தோன்றும் எல்லாவற்றையும் உதறித் தள்ளு!

அவளோ படிகளில் ஏறி சில நிமிடங்கள் அங்கு நின்றாள். முதலாவதாக நடந்தது என்ன தெரியுமா? சில நிமிடங்களுக்குள் ஒரு பையனின் கரங்களைப் பிடித்து நடனமாடத் தொடங்கி விட்டாள். பின்பு அவளுக்கு சுய

நினைவு வந்தபோது, அங்கு நின்று, "நான் நிரந்தரமாக இழக்கப்பட்டேன்" என்று அழுதாள்.

அப்பொழுது நான் நினைத்தேன் எனக்கு வேதாகமம் அதிகம் தெரியாது. ஆனால் இயேசு, "என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்" என்று கூறியிருக்கிறார் என்று நினைக்கிறேன்" என்று. வேய்னுக்கும் அப்பொழுது குடிமயக்கம் சற்று தெளிந்து, அங்கு நடப்பதை உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். பாருங்கள்? நான், "பிசாசே, நீ யாரென்று எனக்குத் தெரியாது. ஆனால் இப்பொழுது உன்னிடம் கூறுகிறேன். இவள் என் சகோதரி, இவளைப் பிடித்துக்கொண்டிருக்க உனக்கு எவ்வித உரிமையும் கிடையாது, அவள் அதை செய்ய வேண்டுமென்று நினைக்கவில்லை; அவள் ஒரு நிமிடம் அங்கு நின்றாள் – (அங்குதான் அவள் தவறு செய்தாள். அவளை விட்டு நீ வெளியே வரத்தான் வேண்டும். நான் சொல்வது கேட்கிறதா?" என்றேன்.

கர்த்தர் எனக்குதவி செய்வாராக. (தேவன் நியாயாசனத்தில் உட்காருவார் என்று எனக்குத் தெரியும்). திரையிடப்பட்டிருந்த அந்த கதவு தானாகவே திறந்து மூடத் தொடங்கினது பம்பிடி, பிளம்பிடி, கா - ப்ளம்ப், கா-ப்ளம்ப், கா-ப்ளம்ப். நான் நினைத்தேன்... அவள், "பில்லி, அங்கே பாருங்கள்" என்றாள்.

நான், "ஆமாம், அது என்ன?" என்றேன் . . . அவள், "எனக்குத் தெரியாது" என்றாள்.

நான் “எனக்கும் தெரியவில்லை” என்றேன். கதவு பம்பிடி-பம்ப், டி - பம்ப் என்று ஓசையுண்டாக்கி, திறந்து மூடிக் கொண்டிருந்தது, “என்ன நேர்ந்தது?” என்று நான் நினைத்தேன். நான் இப்படி பார்த்துவிட்டு, “சாத்தானே, அவளை விட்டுப் போ; இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே அவளை விட்டு வெளியே வா” என்றேன். அப்படி நான் கூறினபோது, இவ்வளவு நீளமுள்ள ஒரு பெரிய வௌவால்; அதன் செட்டைகளிலிருந்து நீண்ட ரோமம் தொங்கிக் கொண்டிருந்தது. அது அவள் பின் பக்கத்திலிருந்து ‘விர்ர்ர்ர்’ என்று வேகமாக பறந்து என்னை நோக்கி வந்தது. நான், “ஓ, ஆண்டவராகிய தேவனே, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் இதனின்று என்னை பாதுகாப்பதாக” என்றேன்.

வேய்ன் படுக்கையிலிருந்து குதித்தெழுந்து பார்த்தான். அது நீண்ட நிழலைப் போல் அங்கு சுற்றிச் சுற்றி வட்டமிட்டு படுக்கைக்குப் பின்னால் சென்றது. வேய்ன் படுக்கையை விட்டு எழுந்து வேகமாக அடுத்த அறைக்கு ஓடினான்.

நான் நெல்லியை வீட்டுக்குக் கொண்டு சென்றுவிட்டு வந்தபோது அதை காணவில்லை அம்மா போர்வையை உதறிப் பார்த்தார்கள். ஆனால் படுக்கையில் ஒன்றுமில்லை. அது என்ன? ஒரு பிசாசு அவளை விட்டு வெளியேறினது. என்ன நேர்ந்தது? அவள் ஒரு வினாடி அங்கு நின்றாள். அவ்வளவுதான்.

நீங்கள் நிற்கவே வேண்டாம். தேவன் தமது வார்த்தையை உங்கள் இருதயங்களில் ஆழமாகப்

பதிக்கிறார். அந்த பட்டயத்தை நீங்கள் எடுத்துக்கொண்டு, வெட்டத் தொடங்குங்கள். அல்லேலூயா “எனக்கு எதற்கும் நேரமில்லை. இப்பொழுது தான் கடந்து வந்தேன். இளைப்பாறுவதற்கு கூட எனக்கு நேரமில்லை” என்று சொல்லுங்கள்.

அந்த தீர்க்கதரிசி, “என் கோலை எடுத்துக்கொண்டுபோய் குழந்தையின் மேல் வை. வழியில் யார் பேசினாலும் மறுமொழி கூறாதே.” பிசாசு, “உன் உடல் நிலை எப்படி இருப்பதாக உணருகிறாய் ....? என்று கேட்டால், மறுமொழி கூறாதே. போய்க் கொண்டேயிரு” என்றான்.

பிசாசு சொல்கிறான், “உனக்கு இன்னாரைத் தெரியுமா? அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட பின்பு, புத்தி சுவாதீனத்தை இழந்து விட்டார்கள்” என்று. அவனுக்கு மறுமொழி கூறாதீர்கள், சென்றுகொண்டேயிருங்கள். உங்களுக்கு இன்னாரைப்பற்றித் தெரியாது. அது உனக்கும் தேவனுக்குமிடையே உள்ள விஷயம். அது உண்மை. தேவனை உங்களுக்கு முன்பாக வையுங்கள்.

***செய்தி:*** இதுவரை சண்டையிட்டவைகளில் மிகப்பெரிய யுத்தம், மார்ச் 11, 1962

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

# ஒரு பெண் மனந்திரும்பி, சுகமடைந்து, பின் தேவன் அவளை வீட்டுக்கு அழைத்தல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: தேவன் ஒரு மனிதனை முதலில் எச்சரிக்காமல் அவனை நியாயத் தீர்ப்புக்குள் கொண்டு வருவதில்லை, ஜூலை 24, 1963, பத்தி எண் 133-155

இப்பொழுது, மேடையிலுள்ள மற்றொரு யோனாவை இன்றிரவு உங்களுக்குக் காண்பிக்க விரும்புகிறேன்.

ஓரிரவு ஜனங்கள் இங்கு வந்திருந்தனர். அந்த ஸ்திரீ (அவளுடைய ஜனங்களில் சிலர்) இன்றிரவு இங்கிருக்கக் கூடும். எனவே நான் பெயரைச் சொல்லப் போவதில்லை. அது யாரென்று உங்களுக்கு ஒரு வேளை தெரிந்திருக்கும். அவர்கள் இங்கு வந்திருந்தனர், மிகவும் அருமையான ஜனங்கள், கென்டக்கியைச் சேந்ர்தவர்கள். அவர்கள் அநேக

ஆண்டுகளாக இங்கு வந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் எனக்கு நல் நண்பர்கள். ஆனால் அவர்கள்... எழுப்புதல் நடந்து கொண்டிருக்கும் போது சபைக்கு வருபவர்கள், எழுப்புதல் முடிந்த பிறகு, பாரம் அதிகமாகும்போது, யாருமே இழுக்காத அத்தகைய வகைகையச் சேர்ந்தவர்கள். நாம் வகுப்புகள் நடத்தும்போது, அவர்களுடைய பிள்ளைகள் அனைவரும் தொட்டில் பட்டியலில் (cradle roll) இடம் பெற்றிருந்தனர்.

ஒரு நாள் நான் வீட்டுக்கு வந்தேன், அது ஏறக்குறைய நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு முன்பிருக்கும், அப்படி ஏதோ ஒன்று, இந்த இளம் பெண் (அவள் தொட்டில் பட்டியலில் இடம் பெற்றிருந்த போது, அவளுக்கு ஏறக்குறைய எட்டு வயதிருக்கும்) விவாகம் செய்து,

அவளுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். அவள் மரணத் தருவாயில் இங்குள்ள மருத்துவமனையில் கிடந்திருந்தாள். அவள் நான்கு அல்லது ஐந்து மாத கர்ப்பிணியாயிருந்தாள். குழந்தை வயிற்றில் இறந்துவிட்டது. அவளுக்கு சிறுநீர் சேர்க்கையினால் இரத்தம் கெட்டிருந்ததால் (uremic) அவர்களால் அறுவை சிகிச்சை செய்து குழந்தையை வெளியே எடுக்க முடியவில்லை. எனவே அந்நிலையில் தாயும் மரித்துப்போக வேண்டும். அறுவை சிகிச்சை செய்ய முடியாது. பாருங்கள், அந்த குழந்தை தாயை கொன்று விடும். எனவே அவர்கள்… அவள் மரித்துக்கொண்டிருந்தாள், அவ்வளவு தான், அவள் பிழைப்பதற்கு வாய்ப்பே இல்லை.

அவளைக் காண நான் சென்றிருந்தேன். அவள் ஆள்விட்டு என்னை அழைத்திருந்தாள். நான் மருத்துவமனைக்குள் சென்றேன். அவள் அங்கு பிராணவாயு கூடாரத்தில் கிடத்தப்பட்டிருந்தாள். நான் கூடாரத்தின் துணியை சிறிது உயர்த்தி, அவளுடன் சிறிது பேசினேன். நான், "என்னை உனக்கு ஞாபகமிருக்கிறதா?" என்று கேட்டேன்.

அவள், "நிச்சயமாக, சகோ, பில், உங்களை எனக்கு ஞாபகமிருக்கிறது" என்றாள்.

நான், "எப்படி உனக்கு... நீ எவ்வளவாக வியாதிப்பட்டிருக்கிறாய் என்பதை அறிந்திருக்கிறாயா?" என்று கேட்டேன்.

அவள், “நான் அறிந்திருக்கிறேன். அதற்காகத் தான் நீங்கள் வரும்படி ஆளனுப்பினேன்” என்றாள்.

நான்,” நல்லது, உனக்கும் கர்த்தருக்குமிடையே எவ்வாறு உள்ளது?” என்று கேட்டேன்

அவள், “சகோ, பில் நான்.... நான் போக ஆயத்தமாயில்லை” என்றாள்.

நல்லது, நாங்கள் முழங்கால்படியிட்டு ஜெபித்தோம். அந்த அறையில் அவளுடைய தாயாரும் கணவரும், இன்னும் பலரும் இருந்தனர். அவளுடைய தாயாரும் கணவரும் அழத்தொடங்கினர். அதன் பிறகு அவளை நான் கேட்டேன். அவள் தேவனுடன் சரிசெய்து கொண்டாள் (அவள் திரும்பி வந்தால் அவளுடைய பொருத்தனைகளைச் செலுத்துவதாக தேவனுக்கு வாக்கு கொடுத்தாள்; அவள்

மன்னிக்கப்பட்டிருந்தால்; அவள் எவ்வளவாக அவரை நேசித்தாள்; அவள் வாழ்ந்து கொண்டிருந்த விதத்துக்காக, அவளுடைய பாவங்களுக்காக அவள் வருத்தம் தெரிவித்தாள்). இப்படியாக அவள் மனஸ்தாபப்பட்டு அழுதாள். சற்று நேரம் கழிந்து நான் எழுந்து கட்டிடத்தை விட்டு வெளியே வந்தேன்.

அடுத்த நாள் காலையில் அவர்கள் என்னை தொலைபேசியில் கூப்பிட்டு, அங்கு மறுபடியும் வரும்படி அழைத்தனர். நான் என்ன கண்டு கொண்டேன் என்றால், அன்று காலை அவர்கள் சிறுநீரினால் இரத்த பாதிப்பு எவ்வளவாக அதிகரித்திருக்கிறது என்று காண பரிசோதனை நடத்தியபோது, அது ஒரு துளி கூட இல்லை என்பதை அவர்கள் கண்டுபிடித்தனர். அது முற்றிலும் போய்விட்டிருந்தது. ஒவ்வொரு துளி

சிறுநீர் விஷமும் அவளை விட்டுப் போயிருந்தது. மருத்துவர்கள் இதைக் கண்ட போது மிகவும் ஊக்கமடைந்து, “என்னே! இதை நாம்.... இது மிகவும் வினோதமான ஒன்று” என்று சொல்லிவிட்டு, “அவளை நாம் அறுவை சிகிச்சைக்காக ஆயத்தப்படுத்துவோம். அடுத்த நாள் காலை வரைக்கும் இதே நிலை நீடிக்குமானால்... அவளுக்கு நாம் பெனிசிலின் கொடுத்துக்கொண்டேயிருந்து” அல்லது அவர்கள் கொடுத்த வேறெதாவதொரு மருந்து “தொற்று கிருமிகள் வராமல் தடுத்துக் கொண்டிருப்போம். வேறெதாவது உடலில் உண்டாவதற்கு முன்பு, நாம் அறுவை சிகிச்சை செய்து, இறந்த குழந்தையை வெளியே எடுத்து விடுவோம். அவளுடைய நிலை சரியாயிருந்தால், அப்பொழுது....” என்றனர்.

நல்லது, பகலில் அவர்கள் இரண்டு மூன்று முறை அவளை பரிசோதனை செய்தனர். மறுபடியும் நள்ளிரவில் அவர்கள் பரிசோதனை செய்து பார்த்தனர். எதுவுமே தவறாயிருக்கவில்லை, முற்றிலும் சரியாயிருந்தது. அவர்கள் அவளை ஆயத்தம் செய்தனர். அவளை பிராணவாயு கூடாரத்திலிருந்து வெளியே கொண்டு வந்தனர். எல்லாம் நன்றாக இருந்தது. அடுத்த நாள் காலையில் அவர்கள் அவளுக்கு அறுவை சிகிச்சை செய்து, குழந்தையை வெளியே எடுத்துவிட வேண்டுமென்றிருந்தனர்.

நல்லது, நான் அங்கு சென்றேன். அவளுக்கு பரிசோதனை நடத்தப்பட்டதால்... இப்பொழுது, அதை நான் அறியவேயில்லை, நான் அறியவேயில்லை, கர்த்தர் என்னிடம் அதைக் குறித்து எதுவுமே கூறவில்லை.

நீங்கள் விரும்பினால், ஜனங்களைக் கேட்டுப்பாருங்கள். எனவே அவர்கள்... அவர்..... இப்படி நடக்கும் என்று அவர் என்னிடம் கூறவேயில்லை. ஆனால், ஓ, என்னே, அப்படிப்பட்ட ஒன்றைக் காண்பது! பாவியான அவளுடைய கணவர் என்னிடம் வந்து, "சகோ. பிரான்ஹாமே, என் ஜீவியத்தை நான் கர்த்தராகிய இயேசுவுக்கு அளிக்கப் போகிறேன்" என்றார்.

நான், "சரி, இங்கு முழங்கால்படியிட்டு, உங்கள் மனைவியின் கரத்தைப் பிடித்துக்கொள்ளுங்கள். இருவருமாக சேர்ந்து இந்த நேர் வாழ்க்கையில் நடவுங்கள்" என்றேன்.

தாய் என்னிடம் வந்து, "சகோ. பிரான்ஹாமே, உனக்குத் தெரியும், இதோ நானும் என் பிள்ளைகளும், நாங்கள் அனைவரும் இந்த கூடாரத்தில்

உள்ளேயும் புறம்பாகவும், உள்ளேயும் புறம்பாகவும் இருந்து வந்திருக்கிறோம். நாங்கள் உட்காந்து நீர் பிரசங்கிப்பதைக் கேட்டு, பீடத்தண்டை சென்று திரும்பி வந்திருக்கிறோம். சகோ, பிரான்ஹாமே, நானும் பின் மாற்றமடைந்துள்ளேன். அவர் என் மகளுக்குச் செய்த நன்மையின் நிமித்தம், நான் கர்த்தராகிய இயேசுவிடம் திரும்பி வர உத்தேசிக்கிறேன்'' என்றாள். நல்லது, பாருங்கள், அது மிகவும் அருமையானது தான், ஆனால் நீங்கள் அதன் காரணமாக கர்த்தராகிய இயேசுவிடம் வருவதில்லை.

நள்ளிரவு, பன்னிரண்டு ஒரு மணிக்கு, அவளுடைய தாயார் சிறிது உறங்கிவிட்டாள். அவள் தாயைக் கூப்பிட்டு, “அம்மா'' என்றாள்.

தாய், “தேனே, உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டாள்.

மகள், “உங்களுக்குத் தெரியுமா, நான் மிகவும் சந்தோஷமாயிருக்கிறேன்” என்றாள்.

தாய், “நீ சந்தோஷமாயிருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது” என்றாள்.

மகள், “நான் தேவனிடம் சமாதானம் பெற்றிருக்கிறேன். ஓ, அது எவ்வளவு அருமையாயுள்ளது!” என்றாள்.

தாய், “அப்படியா?” என்றாள்.

மகள், “நான் வீட்டுக்குப் போகிறேன்” என்றாள்

தாய், “அது எனக்குத் தெரியும். ஆம், இனியவளே, மருத்துவர் நாளை குழந்தையை வெளியே எடுத்துவிடுவார். இன்னும் ஓரிரண்டு நாட்களில், கத்தியால் வெட்டின பாகங்கள் குணமானவுடனே, இங்கிருந்து வீடு சென்று, நீயும் உன்

கணவரும் பிள்ளைகளும் சந்தோஷமாயிருங்கள். ஒரு கிறிஸ்தவளாக இருந்து, தேவனுக்காக வாழ்வாயாக'' என்றாள்.

மகள், ''அம்மா, நான் பரம வீட்டிற்கு போகிறேன் என்று தான் கூறுகிறேன்'' என்றாள்.

தாய் ''நிச்சயமாகவா, தேனே, பயணத்தின் முடிவுக்கு வந்து விட்டாயா?'' என்று கேட்டாள்.

மகள், ''இதுவே என் பயணத்தின் முடிவு'' என்றாள்.

தாய், ''ஓ, என்ன விஷயம்?'' என்றாள்.

மகள், ''பயணத்தின் முடிவு, ஆம், அம்மா, இன்னும் சில நிமிடங்களில் நான் போய் விடுவேன்'' என்றாள்.

அவள் பயமடைந்து பிதற்றுவதாக தாயார் எண்ணினாள். தாய் நர்ஸைக் கூப்பிட்டாள். நர்ஸ் மூச்சை அளந்து பார்த்தாள். எல்லாமே சரியாக இருந்தது. ஐந்தே நிமிடங்களில் அவள் போய் விட்டாள். அவள் மரித்து போனாள்.

இது நடந்து ஓரிரண்டு வாரங்கள் கழித்து நான் வீடு திரும்பிய போது..... சகோ. கிரகாம் பெண்ணின் அடக்க ஆராதனையின்போது பிரசங்கித்தார் என்று நினைக்கிறேன். நான் வீடு திரும்பிய போது, அந்த பெண் அன்றிரவே மரித்துவிட்டதாக என் மனைவி என்னிடம் கூறினாள். என்னே, என்னால்....

நான் தாயைக் காண சென்றேன். ஆம்.

இதைச் செய்ய என்னை தூண்டியது எதுவென்று எனக்குத் தெரியவில்லை. நான், “கர்த்தராகிய தேவனே, இதற்கு நீர்

எனக்கு விளக்கம் தர கடன்பட்டிருக்கிறீர். அங்கு நான் சென்று, அவளுடைய கணவரிடம் நான் சொல்லி, இவைகளை அவருக்கு நீர் செய்த பிறகு, அவர் கர்த்தரிடம் வந்து, இவைகளெல்லாம் நடந்த பிறகு, அந்த பெண்ணின் ஜீவனை எடுத்துக் கொண்டீரே, அதற்கு எனக்கு ஒரு விளக்கம் தர கடன்பட்டிருக்கிறீர்'' என்றேன்.

அவ்விதம் ஏதாவதொன்றை நீங்கள் தேவனிடம் கேட்டால், நீங்கள் தனியே உட்காந்திருக்கும்படி அவர் விட்டு விடுவார். எனக்கு.... அவர் எனக்கும் ஒன்றும் கடன்பட்டிருக்கவில்லை, நான் தான் அவருக்கு கடன்பட்டிருக்கிறேன். நல்லது, சில நாட்கள் உதட்டைப் பிதுக்கிக் கொண்டிருக்கும்படி அவர் என்னை விட்டு விட்டார். இதற்குப் பிறகு மூன்று அல்லது நான்கு மாதங்கள் கழித்து, நான்

ஆற்றங்கரையில் இருந்த போது, கர்த்தர் தரிசனத்தில் என்னோடு பேசி, “நீ தாயிடம் சென்று அவளிடம், ‘இதற்கு முந்தின ஆண்டில், மகள் ‘பிக்னிக்’ சென்றிருந்தபோது, ஆற்றில் அவள் மூழ்கிவிட இருந்த போது அவளுடைய நேரம் வரவில்லையா? அவள் அப்பொழுதே போய் விட்டிருக்க வேண்டும். ஆனால் அவள் போக ஆயத்தமாயிருக்கும்போது அவளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றிருந்தேன்’ ஆகையால் தான் இவையெல்லாம் நடந்தது. அதற்காகத்தான் அங்கு நீ சென்றிருந்தாய் என்று நான் கூறினதாகச் சொல்” என்றார்.

நான் முழங்கால்படியிட்டு கதறினேன். நான், “கர்த்தராகிய இயேசுவே, என்னை மன்னியும். மதியீனனான உம்முடைய

ஏழ்மையான ஊழியக்காரன். நான் அப்படி சொல்லியிருக்கக் கூடாது'' என்றேன்.

நான் அந்த ஸ்திரீயிடம் சென்றேன். அவள் மார்கெட் தெருவில் வசித்துக் கொண்டிருந்தாள். நான் அவளிடம் சென்று, ''உன்னை ஒரு கேள்வி கேட்கப் போகிறேன்'' என்றேன்.

அவள், ''சகோ. பில், கேளுங்கள்'' என்றாள்.

நான், ''இந்தப் பெண் ஏறக்குறைய மூழ்கினது உண்மையா?'' என்று கேட்டேன்.

அவள், ''சகோ, பில், அது உண்மை. அவளுடைய கணவரும் மற்றவர்களும் அவளை தூக்கி வெளியே கொண்டு வர வேண்டியதாயிற்று. அவர்கள் அழுத்தம் கொடுத்து செயற்கை சுவாச முறையை (artificial respiration) கையாண்டனர்.

அவர்கள் இயந்திரத்தின் உதவியைக் கொண்டு அவளுக்குள் இருந்த தண்ணீரை வெளியே ‘பம்ப்’ **(Pump)** செய்தனர். அவள் குட்டை பாவாடையை அணிந்திருந்தாள். அவர்கள் ‘பிக்னிக்’ **(picnic)** சென்றிருந்தனர். அவள் ஆற்றுக்கு சென்று, மணலின் மேல் கால் வைத்த போது, தலைகீழாக வழுக்கி விழுந்து தண்ணீரில் மாட்டிக்கொண்டாள். அவர்கள் அவளை கவனிக்கவில்லை. அவள் மேலே வருவதும் மூழ்குவதுமாக அவர்கள் கண்ட போது, அவர்கள் ஓடிப்போய் அவளைத் தூக்கியெடுத்துக் கொண்டு வந்தனர். அவள் ஏறக்குறைய மரித்துப் போனாள்’’ என்றாள்.

நான், “அவள் போக வேண்டிய நேரம் அதுவே’’ என்றேன்.

பாருங்கள், தேவன், தாம் என்ன செய்கிறார் என்பதை அறிந்திருக்கிறார்.

"ஆண்டவரே, அதைக்குறித்து எனக்குச் சொல்ல நீர் கடன்பட்டிருக்கிறீர்" என்னும் மனப்பான்மையை நான் உடையவனாயிராமல் இருந்திருந்தால், அவர் ஒரு வேளை எனக்கு அப்பொழுதே தெரியப்படுத்தியிருப்பார். அவர் எனக்கு எதுவுமே கடன்பட்டிருக்கவில்லை.

ஓரிரவு நான் ஒரு கூட்டத்துக்குச் சென்றிருந்தேன். அப்பொழுது வியாதிப்பட்டிருந்த ஒருவருக்காக ஜெபித்துக் கொண்டிருந்த ஒரு சுவிசேஷகர், "தேவனே, இவருக்கு சுகமளிக்கும்படி உமக்கு கட்டளையிடுகிறேன்" என்றார். யார் தேவனுக்கு கட்டளையிடுவது? பாருங்கள், அது புத்தியுள்ள காரியமல்ல. ஏனெனில் தேவன், தாம் செய்ய விரும்புவதையே செய்கிறார்.

களிமண் குயவனைப பார்த்து, “என்னை ஏன் இப்படி வனைந்திருக்கிறாய்?” என்று கேட்க முடியுமா? பாருங்கள்? நிச்சயமாக முடியாது. தீர்க்கதரிசி அமைதியாக இருந்து, பதில்பெற கர்த்தரைத் தேடினால், நிச்சயமக பதில் கிடைக்கும். பாருங்கள்?

சர்ப்பத்தின் வித்தின் பேரில் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கும் இந்நபரைப் போல, பாருங்கள். கவனித்துக் கொண்டேயிருங்கள். மிகவும் அவசரப்படாதீர்கள். கர்த்தரிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு அவர் சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே நிறைவேறும்படி செய்வார்

★★★★★

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

நீங்கள் இரகசியமாக ஜெபிக்கிறீர்களா? அந்த இடத்திலேயே தரித்திருங்கள். உங்களுடைய அறைகளுக்குச் செல்லுங்கள். எங்காவது ஒழிந்து கொள்ளுங்கள், கீழே முழங்கால்படியிடுங்கள், தேவனுக்கு முன்பாகக் காத்திருங்கள். அங்கேயே காத்திருங்கள்.

இயேசுவின் பட்சம் சேர்ந்திருத்தல், 63-1226, பத்தி எண் 110


நம்முடைய ஜெபத்திற்குப் பதில்
கிடைப்பதைப் பார்ப்பது
வரையில், நம்முடைய
ஜெபத்தை நிறுத்தக்கூடாது.
எதிர்பார்ப்பு, 61-0207, பத்தி எண் E-17
வில்லியம் மரியன் பிரன்ஹாம்

எனவே நாம் எப்பொழுதும் படுக்கைக்கு செல்லும் முன்னர், இரவில் ஜெபிக்கிறதை ஒரு பழக்கமாக கொள்ள முயற்சிக்கிறோம். நான் மனந்திரும்பினது முதல் அதை என் பழக்கமாகக் கொண்டிருக்கிறேன். அதிகாலையில் நான் எழுந்து, அது அதிக இருளாயிருந்தாலும் பனி மூட்டமாயிருந்தாலும், நான்-நான் எங்கே போகிறேன் என்பதே தெரியாமல் நடந்து செல்வேன். ஆனால் நான் அவரிடம் என் கரத்தைப் பிடித்து, அந்த நாள் முழுவதும் நடத்தும்படி கேட்பேன்.

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

Only believe,
Only believe
All things are possible,
Only believe.




சகோ. பினேகாஸ்
போன்: 8838623242,
9551855108
Email: jebakumarsa@gmail.com
www.thefinish.in